# 50 ஆயிரம் தொழிலாளர்களுக்கு - ரூ.45 கோடியில் ‘திறன் மேம்பாட்டுப் பயிற்சி’

# திருக்குவளை தொழிற்பயிற்சி நிலையத்தில் ரூ.3 கோடியில் புதிய மாணவர் விடுதி!

## சட்டப்பேரவையில் ‘தொழிலாளர் நலன்’ மானியக் கோரிக்கையில் அமைச்சர் சி.வி.கணேசன் பதிலுரை... 7ஆம் பக்கத் தொடர்ச்சி

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என்ற முறையிலே முதலமைச்சர் அவர்களோடு சென்றிருந்தேன். அங்கு சென்று factory உள்ளிட்ட எல்லா இடங்களையும் பார்த்தார்கள். அங்கு சென்று பார்க்கும்போது, எல்லாம் ஒரே இடத்தில் செய்வதில்லை. அந்தக் கலவை, chemical எல்லாம் முதலில் ஒரு இடத்தில் mixing செய்வார்கள். mixing செய்த பிறகு அடுத்து, filling. filling என்றால் அந்த வெடியின் ஓட்டைக்குள் போட்டு fill செய்வது, filling. அதற்குப் பிறகு finishing, அதை முழுமைப்படுத்துவது finishing. அதற்குப் பிறகு அந்தப் பக்கம் சென்ற பிறகுதான் packing. Packing முடிந்து despatch ஆகி போகும்.

**எந்த முதல்வரும் போகாத பட்டாசு தொழிற்சாலை முதல்வர் மு.க.ஸ்டாலின் முதன்முறையாக!**

இதையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு இடமாக பார்வையிட்டு எல்லா தொழிலாளர்களிடத்திலும் அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து வந்தார்கள். வரும்போது ஒரு அம்மாவிடம் சென்று கேட்டார்கள், அம்மா உங்களுக்கு என்ன அம்மா குறை இருக்கிறது என்று கேட்டபோது, அந்த அம்மா என்ன தெரிவித்தார் என்றால், ஐயா இதுவரையிலும் இந்த பட்டாசுத் தொழிற்சாலைக்கு எந்த முதலமைச்சரும் வந்ததில்லை. நீங்கள் வந்ததற்கு உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்று முதலில் அந்த அம்மா தெரிவித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அம்மா தெரிவித்த பிறகு, நம்முடைய முதல்வர் அவர்கள் கேட்டார்கள், உனக்கு என்ன அம்மா வேண்டும், என்ன குறை என்று கேட்டார்கள். அதற்கு அந்த அம்மா சொன்னது, ஐயா நாங்கள் ஒவ்வொரு நாளும் எங்களுடைய உயிரை பணயம் வைத்துத்தான் இந்த வேலையை செய்து கொண்டிருக்கிறோம். அதனால், ஒருவேளை நாங்கள் இறக்க நேரிட்டால், அப்போது அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிறகு அந்த அம்மா சொன்னது, ஒருவேளை அப்படி இறக்க நேரிட்டால் எங்களுடைய குழந்தைகளை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். அதில் குறிப்பாக எங்களுக்குப் பின்னால் அந்தக் குழந்தைகளுக்கு கட்டாயமாக கல்வி உதவி செய்திட வேண்டுமென்று அந்த அம்மா சொன்னார்கள். முதல்வர் அவர்கள் ஈரக் கண்களோடு அங்கிருந்து புறப்பட்டு வந்து ஓய்வு இல்லத்திற்கு வந்த பிறகு உடனடியாக சொன்னார்கள்,

பட்டாசு தொழிற்சாலையில் பணிபுரிகின்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அவர்களுடைய தாய், தந்தை இறந்துவிட்டால், அவர்கள் படிக்கின்ற கல்விச் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என்று உத்தரவிட்ட முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, அவர்கள் 18 வயது நிறைவடைகின்ற வரையில் அவர்களுடைய அனைத்துப் பராமரிப்பு செலவுகளையும் அரசே ஏற்குமென்று உத்தரவை போட்டவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, சொன்னதோடு அல்ல, உடனடியாக அதற்கான தொகை ரூ.5 கோடி நிதியை அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளித்து, அரசாணை பிறப்பித்த முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**அரசு ஈட்டுறுதி திட்டம்!**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் என்பது அமைப்புசார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், அவர்களை சார்ந்தோர்களுக்காகவும் செயல்படுகின்ற சமுதாய பாதுகாப்புத் திட்டமாகும். தமிழ்நாட்டில் 43.77 இலட்சம் தொழிலாளர்களும் மற்றும் 1.75 கோடி தொழிலாளர்களின் குடும்பத்தைச் சார்ந்தோர்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகின்றனர். தமிழ்நாட்டில் 11 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும், 241 ஈட்டுறுதி மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொழில் வளர்ச்சியும், உற்பத்தியும், பொருளாதார வளர்ச்சியும் எவ்வளவு முக்கியமோ அதைவிட பன்மடங்கு தொழிலாளர்களின் உடல் நலமும், மன நலமும் முக்கியம் என்ற அடிப்படையில் முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி, கடந்த நான்கு ஆண்டுகளில் 19 ESI மருந்தகங்கள் புதியதாக தொடங்கப்பட்டுள்ளன என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். “உலக நாடுகளில் ஆங்காங்கே அரசியல் வேறாயினும், உழைப்பு ஒன்றே ஒன்றுதான்; உழைப்போர் உலகமும் ஒன்றே ஒன்றுதான்; உழைப்பு நல்கி பிழைப்போர் அனைவரும் உடன்பிறப்புகள் தான்; ஒரு தாய் பெற்ற நற்றவப் பிள்ளைகள்தான்” என, தாய் காவியத்தில் உழைப்பாளிகளைப் பற்றிக் கூறியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். இதன் அடிப்படையில் தொழிலாளர் நலன் காக்கும் அரசாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அரசு வீரநடை போட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**அறிவிப்புகள்**

1. திருக்குவளை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் தங்கிப் பயிலும் வண்ணம் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிய மாணவர் விடுதி கட்டடம் கட்டப்படும்

2. தமிழ்நாட்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் திறன் பயிற்சி பெறுவதற்கான சூழலை மேம்படுத்தும்பொருட்டு, 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் பழைய கட்டடங்களின் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் 67 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்

3. தொலைதூரப் பகுதிகளிலிருந்து வந்து பயிலும் மாணவர்களின் வசதிக்காக அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலுள்ள 50 விடுதிகள் 22 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்

4. கட்டுமானத் தொழிலாளர்கள் அவர்களது அன்றாடப் பணி தொடர்பாக அதிக அளவில் காலையில் கூடி காத்திருக்கும் இடங்களில், கட்டுமானத் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், குடிநீர் மற்றும் இதர அடிப்படை வசதிகளுடன்கூடிய 50 வசதி மையங்கள் 20 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்

5. கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய உறுப்பினராக இருந்து 60 வயது பூர்த்தி அடைந்து, குடும்பத்தினரின் கவனிப்பும் பராமரிப்பும் இல்லாத கட்டுமானத் தொழிலாளர்கள் தலா 50 நபர்கள் தங்கும் வகையில் உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் சென்னையில் இரண்டு முதியோர் இல்லங்கள் தொடங்கப்படும்

6. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த மற்றும் பதிவு செய்யாத தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பணியிடத்து விபத்து மரண உதவித் தொகை 5 இலட்சம் ரூபாயிலிருந்து 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்

7. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகைகளோடு கூடுதலாக செவிலியர் (Nursing) பட்டயப் படிப்பு பயில 3 ஆயிரம் ரூபாய், உணவு தயாரித்தல் மற்றும் சேவை (Catering and Services) பட்டயப் படிப்பு பயில 3 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்படும்.

8. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முறையான பட்டப் படிப்பு, முறையான பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி பட்டப் படிப்பு மற்றும் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு போன்ற உயர் கல்வி பயில தற்போது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை, கூடுதலாக ஆயிரம் ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.

9. பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முனைவர் பட்டப் படிப்பு (Ph.D) பயிலும் நேர்வில், ஒரு கல்வி ஆண்டுக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம், மூன்று ஆண்டுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

10. பெண்கள் தன்னம்பிக்கையோடு ஆட்டோ ஓட்டும் சுயதொழில் செய்து வாழ்க்கையில் முன்னேறுவதை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 1,000 பெண்/திருநங்கை ஓட்டுநர்கள் சொந்தமாக புதிய ஆட்டோ வாகனம் வாங்கும் செலவினத்தில் தலா ஒரு இலட்சம் ரூபாய் மானியமாக, வழங்கப்படும்.

11. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர்களின் திறனை மேம்படுத்த, கட்டுமான வேலை, கம்பி வளைப்பு வேலை, தச்சு வேலை, மின் பணியாளர் வேலை, பிளம்பர், வெல்டர், வர்ணம் பூசுதல், ஏசி மெக்கானிக், கண்ணாடி அறுத்தல், சலவைக்கல் ஒட்டுதல் உள்ளிட்ட பல தொழில் இனங்களில் ஏழு நாட்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி, நாள் ஒன்றுக்கு 800 ரூபாய் ஊதியத்துடன், 50,000 தொழிலாளர்களுக்கு ரூபாய் 45 கோடியே 21 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் சி.வி.கணேசன் பதிலுரை வழங்கினார்.

**டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த 120 இளைஞர்களுக்கு ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் உணவு பதப்படுத்தும் தொழில் தொடங்க தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.**

---

### கடுமையான உழைப்புடன் நிர்வாகிகள் கழகப் பணி ஆற்றினால் –

# கழகம் 2026 தேர்தலில் மாபெரும் வெற்றி பெறும்!

## ஆத்தூரில் – பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்றபின் – கழகத்தினரிடம் அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!



திண்டுக்கல், ஏப். 12 -

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களிடம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் கோரிக்கை மனுக்கை பெற்று உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு பொது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்டார். ஒரு சிலர் தங்களின் பிள்ளைகளுக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை மனு கொடுத்த போது, அவர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்ற அமைச்சர் ஐ.பெரியசாமி தகுதியுள்ளவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகள் இல்லம் தேடி வரும் என்றார்.

ஆத்தூர் தொகுதியை பொறுத்தவரை கட்சி நிர்வாகிகள் ஒரு சிலர் தங்களுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளால் கழகப் பணி ஆற்றுவதில் சுணக்கம் காட்டி வருகின்றனர். தி.மு.க.வை பொறுத்தவரை கடுமையான உழைப்புடன் கழகப் பணி ஆற்றுபவர்களுக்கு உயர்பதவி நிச்சயம் கிடைக்கும். வருகின்ற 2026ஆம் ஆண்டு தேர்தல் நமக்கு முக்கியமான தேர்தல் ஆகும். இந்த தேர்தலில் நாம் மாபெரும் வெற்றி பெற நமக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளை மறந்து சகோதர பாசத்துடன் கழகப் பணியாற்றி மாபெரும் வெற்றி பெற வேண்டும் என்றார்.

கழகப் பணிகள் மற்றும் நலத்திட்ட பணிகள் சம்மந்தமாக மே1 முதல் ஆத்தூர் தொகுதி முழுவதும் சுற்றுப் பயணம் செய்து கிராம ஊராட்சிகளுக்கு சென்று அங்குள்ள பொதுமக்களிடம் கோரிக்கை மனு அதற்கான தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியின் போது மாநில விவசாய அணி இணைச் செயலாளரும், ஆத்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளருமான கள்ளிப்பட்டி மணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக துணைச்செயலாளர் ஆ.நாகராஜன், வணக்கத்திற்குரிய மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா, ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலர் வடிவேல் முருகன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண்ஜெகநாதன்,

மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், துணைத்தலைவர் ஜெயபால், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகா னந்தன், பஞ்சம்பட்டி மணி, நகர சிறுபான்மை யினர் அணி துணை அமைப்பாளர் என்.நஜீப், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள், நெல்லை சுபாஷ், ஆனந்தன், ஜான் பீட்டர் மற்றும் நரசிங்கம், வீரபாண்டி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

---

### சிவகங்கை – கல்லல் ஒன்றியத்தில்

# ரூ.73 இலட்சம் மதிப்பில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – மக்களிடம் ஒப்படைப்பு!

சிவகங்கை, ஏப். 12 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி கல்லல் ஊராட்சி சிறாவயல் கிராமத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூபாய் 49.80 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சமுதாயக்கூடம்,

குன்றக்குடி ஊராட்சி மயிலாடும்பாறையில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதிருபாய் 9.00லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயகூடம், தட்டட்டி ஊராட்சி கொரட்டி கிராமத்தில் ரூபாய் 7.50லட்சத்தில் கட்டப்பட்டுள்ள விருந்தினர் மேடை இளங்குடி ஊராட்சி கரு குடியில் ரூபாய் 6 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள விருந்தினர் உணவுக்கூடம் உட்பட மொத்தம் ரூபாய் 72 லட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள முடிவடைந்த 4 திட்டப்பணிகளை கிராமமக்களிடம் அர்ப்பணிப்பு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது .

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மக்களுக்கு திட்டப்பணிகளை அர்ப்பணித்து சிறப்புரையாற்றினார் .

இந்த நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக் குடி சுப்பிரமணியன், ஒன்றிய துணை செயலாளர் எஸ். முத்துக்குமார் ஆணையர்கள் ரத்தினவேலு, மகாலிங்கம், உட்பட கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.



கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் மதுரை வில்லாபுரம் பகுதியைச் சேர்ந்த மாணவி பிரியதர்ஷினி தனது மருத்துவ செலவிற்கு உதவி கேட்டு கோரிக்கை மனு அளித்திருந்தார், அதனைத் தொடர்ந்து உடனடி நடவடிக்கையாக அந்த மாணவிக்கு இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக ரூபாய் 25 ஆயிரத்திற்கான காசோலையை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., வழங்கினார். உடன் இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தரராஜன், மாவட்ட துணை செயலாளர் மூவேந்திரன் உள்ளிட்டோர் உள்ளனர்.



விருதுநகர் மாவட்டம் , சிவகாசி சி.எஸ்.ஐ. மனவளர்ச்சி குன்றியோர் பள்ளியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் , மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வி.ப.ஜெயசீலன் தலைமையில் , சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் ஜி.அசோகன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் , 85 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ .1,06,000 / வீதம் மொத்தம் ரூ .90.10 இலட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட மோட்டார் இருசக்கர வாகனங்களையும் , 84 பயனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை என மொத்தம் 169 பயனாளிகளுக்கு ரூ .90.10 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார் . உடன் வர்த்தக அணி வனராஜ், சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன், பகுதிச் செயலாளர் காளிராஜன் ஆகியோர் இருந்தனர்.

### நெல்லை மாவட்டம் – பத்தமடை ஒன்றிய விவசாய அணி நிர்வாகி

# பத்தமடை வே.கணேசன் இல்லத் திருமண விழா!

## அமைச்சர் கே.என்.நேரு வாழ்த்துரை! இரா.ஆவுடையப்பன் தலைமை! அப்துல் வகாப் முன்னிலை!

நெல்லை, ஏப். 12 -

நெல்லை மாவட்டம் பத்தமடை ஒன்றிய விவசாய அணி ஜேசிபி வே. கணேசன் இல்லத் திருமண விழா நிகழ்வு வருகிற 16.04.2025 - புதன்கிழமை மேலசெவல் பேரூராட்சி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

நெல்லை மாவட்டம் பத்தமடை வே. கணேசன் - க.யசோதை ஆகியோரது மகள் ஜி.இசக்கியம்மாள் என்ற வேணிக்கும், என். சுடலைஎஸ் இந்திரா ஆகியோரது மகன் என்ஜினியர் எஸ்.நாராயணனுக்கும் திருமண விழா நிகழ்வு வருகிற 16.04.2025 புதன் கிழமை மேலச்செவல் பேரூராட்சி திருமண மண்டபத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப் முன்னிலையில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியை சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துப்பாண்டி என்ற பிரபு,மேற்கு ஒன்றிய செயலாளர் முத்து கிருஷ்ணன், பத்தமடை பேரூர் செயலாளர் சிந்தா மதார் ஆகியோர் தொகுத்து வழங்குகின்றனர்.மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ. பெருமாள் வரவேற்புரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர்,மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன் கான்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன் சா.ஞானதிரவியம், சித்திக், பேச்சிப் பாண்டியன்,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன்,பாளை ஒன்றிய செயலாளர் ஒன்றிய குழு தலைவர் கே. எஸ்.தங்கப்பாண்டி, நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலாசத்தியானந்த், மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன்,மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார்ஆதித்தன், மாவட்ட துணை செயலாளர் நம்பி,சுரேஷ்,உள்பட மாநில, மாவட்ட,மாநகர,பகுதி,ஒன்றிய,வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், கழக தொண்டர்கள்,சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.



இராமநாதபுரம் வழிவிடுமுருகன் கோயில் 85 ஆம் ஆண்டு பங்குனி உத்திர திருவிழாவிற்கு பக்தர்கள் செல்லும் சாலையில் வெயிலின் தாக்கத்தை குறைக்கும் வகையில் லாரிகள் மூலம் சாலையில் தண்ணீர் ஊற்றுவதை சட்டப்பேரவை உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் தொடங்கி வைத்தார். இதனை தொடர்ந்து, ராமநாதபுரம் நகர கழகம் சார்பில் நகர மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம் ஏற்பாட்டில் பங்குனி உத்திர திருவிழாவிற்கு வந்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானத்தை காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணைத்தலைவர் பிரவீன்தங்கம் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.